முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.31/2014 PW:1 09.06.2023**

2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் **09** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சத்யா என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்யா | வயது | 38 |
| த/க/. பெயர் | செல்வம் | தொழில் | வீட்டுவேலை |
| ஜாதி | | கிராமம் | ராமநத்தம் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை**

1. உங்கள் கணவர் செல்வம் என்றால் சரிதான். செல்வம் அழகப்ப படையாச்சி மகன்தான் என்பதற்கு பிறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. செல்வம் படித்த பள்ளியின் மாற்றுச் சான்றிதழில் அவர் அப்பா பெயர் அழகப்ப படையாச்சி என்று உள்ளதற்கு அதனை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. செல்வம் தாயார் நாவம்மாளுக்கும் தந்தை அழகப்ப படையாச்சிக்கும் நடைபெற்ற திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அழகப்ப படையாச்சி மனைவி பெயர் பெரியம்மாள் என்றால் சரிதான். அழகப்ப படையாச்சியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அழகப்ப படையாச்சியின் தந்தைக்கு அது பூர்வீக சொத்து என்பதற்கு அ பதிவேடு மற்றும் ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. செல்வம் தாயார் நாவம்மாளுக்கும் தந்தை அழகப்ப படையாச்சிக்கும் திருமணமானதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கோயிலில் திருமணம் ஆனது. எந்த ஊரில் திருமணம் ஆனது என்றால் தெரியாது. எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் தெரியாது. 1956 க்கு முன்பா , பின்பா என்றால் தெரியாது.

2. நீங்கள் தாக்கல் செய்துள்ள வாதசாஆ.1, 2 ல் புல எண்ணோ மற்றும் விஸ்திரணமோகுறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதசாஆ 1, 2 கூட்டுப்பட்டாவாக உள்ள நிலையில் யார் யாருக்கு எவ்வளவு என்பது தெரியுமா என்றால் தெரியாது. வாதசாஆ 1, 2 ஐ எதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சொத்துக்காக தாக்கல் செய்துள்ளேன்.

3. வாதசாஆ 3 ல் உங்கள் கணவர் பெயரோ அழகப்ப படையாச்சி பெயரோ, அழகப்ப படையாச்சியின் மற்ற வாரிசுகள் பெயரோ இல்லை என்றால் சரிதான். வாதசாஆ 3 ல் உள்ள நபர்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். வழக்கு 4 வது இனத்திற்கான வாதசாஆ 4 ல் செல்வம் பெயர் இல்லை என்றாலும் மற்ற வாரிசுகளான சேகர்,அஞ்சுகம், சாந்தி பெயர்கள் உள்ளது என்றாலும் சரிதான். வாதசாஆ 6 ல் உள்ள பட்டியல் ராமநத்தம் கிராமத்தினுடைய முழு வாக்காளர் பட்டியல் இல்லை என்றால் சரிதான். எந்த ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் அசல் இல்லை என்றால் சரிதான்.

4. செல்வத்தின் தாயார் பெயர் நாவம்மாள் என்றால் சரிதான். வாதசாஆ 7 உங்கள் திருமண பத்திரிக்கையில் பெரியம்மாள் என்றுதான் உள்ளது என்றால் சரிதான், அதில் அழகப்பன் என்றுதான் அவர் தந்தை பெயர் உள்ளது. தாயார் நாவம்மாள் ஆக இருந்தாலும் வளர்த்தது அழகப்பன்தான் என்றால் சரிதான், அழகப்பன்தான் அவரது தந்தை. நாவம்மாளின் கணவர் அழகப்பன்தான். வாதசாஆ 8 ஆன உங்கள் வீட்டாரின் நிச்சயதார்த்த பத்திரிக்கையில் செல்வத்தின் தாயார் பெரியம்மாள் என்றுதான் உள்ளது.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi.